## வரலாறு

**1.** எந்த இந்திய வம்சாவழியினர் விதவை மறுமணத்திற்கு "பாட்டாம்" என்ற வரியை விதித்தனர்?

(A) முகலாயர்கள்

**(B) பீஷ்வாக்கள்**

(C) சம்புவராயர்கள்

(D) தஞ்சை நாயக்கர்கள்

**2.** பின்வரும் கருத்தினைக் கூறிய இந்திய அரசியல் தலைவரை அடையாளம் காண்.
"தீண்டாமையை விட்டொழிக்காவிடில் இந்தியர்கள் ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற தகுதியற்றவர்கள்".

(A) பாலகங்காதர திலகர்

(B) கோபால கிருஷ்ண கோகலே

**(C) மோகன்தாஸ் காந்தி**

(D) டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்

**3.** கீழ்கண்டவர்களில் 1857ம் ஆண்டு புரட்சியில் கலந்து கொள்ளாமல் விலகியே இருந்தவர்கள் யார்?

1. சிந்தியா
2. ஹோல்கர்
3. கெய்க்வர்
4. நிஜாம்

(A) 1, 2 மற்றும் 4 மட்டும்

**(B) 1, 2, 3 மற்றும் 4**

(C) 2, 3 மற்றும் 4 மட்டும்

(D) 1 மற்றும் 4 மட்டும்

**4.** 1931-ம் ஆண்டு கராச்சியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்திற்கு தலைமை வகித்தவர் யார்?

**(A) சர்தார் வல்லபாய் பட்டேல்**

(B) காந்தி

(C) லாலா லஜபதி ராய்

(D) அன்னிபெசன்ட்

**5.** கீழ்காணும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து தேர்வு செய்க

கூற்று (A): ரோமானியர் தமிழகத்துடன் வணிக தொடர்பு கொண்டிருந்தனர். 6 லட்சம் தங்க நாணயங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டது, இதனால் ரோமானிய பொருளாதாரம் நிலை குலைந்தது

காரணம் (R): ரோமானிய வணிகம் கி.மு. 68ல், நீரோ மன்னன் இறந்த பின்னர் வீழ்ச்சியடைந்தது

(A) (A) மட்டும் சரி (R) தவறு

**(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R), (A) உடைய சரியான விளக்கமாகும்**

(C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

(D) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R), (A) உடைய சரியான விளக்கமல்ல

**6.** 1971-ம் ஆண்டு இந்திய - சோவியத் உடன்படிக்கையின் வாக்கியங்களை கவனிக்கவும் :
கீழே குறிப்பிட்டுள்ள வாக்கியங்களில் எதுஃஎவை சரியானவை?

I. இவ்வுடன்படிக்கை 20 ஆண்டுக்கு ஏற்படுத்தப்பட்டது

II. சோவியத் வெளியுறவுத் துறை அமைச்சர் குரோமிகோ என்பவருக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சர்தார் சுவரன் சிங் என்பவருக்குமிடையே 1971 ஆகஸ்ட் 9-ல் ஏற்படுத்தப்பட்டது

III. இவ்வுடன்படிக்கை இரண்டு நாடுகளுக்-கிடையே நல்லுறவை பலப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ஆசியா மற்றும் உலகளவில் அமைதியை ஏற்படுத்த உதவும் என முன்னாள் காங்கிரஸ் தலைவர் கே.காமராஜ் கூறியுள்ளார்.

(A) I மட்டும்
(B) I மற்றும் II மட்டும்
(C) II மட்டும்
**(D) I, II மற்றும் III மட்டும்**

**7.** 1868 ஆம் ஆண்டில், இந்தியாவின் தேசிய வருவாய் மதிப்பீட்டுக் குழுவினைத் தலைமை தாங்கியவர்
(A) V.K.R.V. ராவ் ஆவார்
(B) ஷா மற்றும் கம்பட் ஆவார்
**(C) தாதாபாய் நௌரோஜி ஆவார்**
(D) W.C. பீட்டர்சன் ஆவார்

**8.** பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :

| | |
|---|---|
| (a) K.R. அய்யங்கார் | 1. வைக்கம் சத்தியாகிரகம் |
| (b) கேளப்பன் | 2. இந்து மகாசபை |
| (c) எம்.ஆர். மஸானி | 3. மெட்ராஸ் மகாஜன் சபை |
| (d) ஏம்.எம். மாளவியா | 4. காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| **(C)** | **3** | **1** | **4** | **2** |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**9.** பின்வருவனவற்றுள், பிற்கால சோழர்கள் பயன்படுத்திய திரவ அளவைகள் எது?
(A) மா, குழி
(B) கழஞ்சு, மாடை
**(C) நாழி, உரி**
(D) தூணி, பதக்கு

**10.** இரபிந்தரநாத் தாகூர் பற்றிய தவறான கூற்றை சுட்டிக்காட்டவும்
I. வங்காளத்தில் சாந்திநிகேதனை நிறுவினார் (தற்போது இதுவே விஷ்வபாரதி பல்கலைக்கழகம்)
II. 1915ல் நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியர் இவர் ஆவார்
III. 'போஸ்ட் ஆபிஸ்' மற்றும் 'கோரா' ஆகியவை இவரது படைப்புகளாகும்
IV. இந்தியா மற்றும் ஸ்ரீலங்காவுக்கான தேசிய கீதத்தை எழுதினார்
(A) I மட்டும்
(B) II மட்டும்
(C) I மற்றும் III மட்டும்
**(D) II மற்றும் IV மட்டும்**

**11.** கீழ்கண்டவற்றுள் அலிகார் இயக்கத்துடன் தொடர்பில்லாதது எது?
I. இந்திய முஸ்லீம்களுக்கு நவீன கல்வி அளித்தல்
II. முஸ்லீம் சமூகத்தை சீர்திருத்துவது
III. நவீனமயமாக்களில் இந்திய முஸ்லீம்களை நெருங்கச் செய்தல்
IV. இந்திய முஸ்லீம்களுக்கிடையே தேசிய உணர்வைவூட்டுதல்

(A) I
(B) II
(C) III
**(D) IV**